ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# அழகியல் நோக்கில் ஐங்குறுநூறு (வேட்கைப்பத்து)

முனைவர் அ. டெல்பின்,
உதவிப் பேராசிரியர்,
திருச்சிலுவை கல்லூரி, நாகர்கோவில்.

ஆய்வுச் சுருக்கம்

சங்க காலம் முதல் இக்காலம் வரை கவிஞர், புலவர், அரசர், எழுத்தாளர் போன்றோர் தன் படைப்புகளில் இயற்கை, மனிதன், விலங்குகள், போன்றவற்றை அழகுபட எழுதியுள்ளனர். நாம் காணும் ஒவ்வொரு பொருளையும் நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்துவதற்காக அவற்றை அழகுபட வருணித்துக் கூறியுள்ளனர். கவிதை, சிறுகதை, புதினம் போன்றவற்றையும் அழகுணர்ச்சியுடன் கவிஞர்கள் படைத்துள்ளனர். சங்க இலக்கிய எட்டுத்தொகையில் அகம், புறம், அகப்புறம் என்று மூன்று வகையாத் தொகுக்கப்பட்டுள்ளது. அவற்றில் மூன்றாவதாகத் தொகுக்கப்பட்டுள்ள ஐங்குறுநூற்றில் ஐந்து திணைகளுக்கும் பத்து பத்து பாடல்கள் என ஐந்நூறு பாடல்கள் அமைந்துள்ளது. இவற்றில் தொல்காப்பிய அடிப்படையில் இல்லாமல் மருதத்திணையை முதன்மையாக வைத்து போற்றக் கூடிய சிறந்த நூலாகும். அதேபோல் ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்தில் சிவபெருமான் உமாதேவியைப் பாதியாகக் கொண்டது போல் தலைவனும் தலைவியும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று எடுத்துரைப்பது இதன் சிறப்பாகும். எனவே சங்க இலக்கிய தொகை இலக்கியங்களில் ஐங்குறுநூற்றின் அழகியல் இக்கட்டுரையின் வாயிலாக அறியலாம்.

## முன்னுரை

வேட்கைப்பத்து என்பதற்கு தலைவன் மீது தலைவி கொண்டுள்ள விருப்பத்தை களவு மற்றும் கற்பு ஆகிய இரு நிலைகளிலும் எவ்விதம் வெளிப்படுத்துகிறாள் என்பதைத் தோழி தலைவனிடம் எடுத்துக்கூறுவதாக இப்பகுதி அமைந்துள்ளது. மருதத்திணையின் உரிப்பொருள் ஊடலும் ஊடல் நிமித்தமும் ஆகும். நிலையான வாழ்வைப் பெற்ற நிலம் மருதம். ஓய்வு நேரம் மிகுதியாக இருந்த காரணத்தினால் இந்நிலத்தில் பரத்தையர் பிரிவு என்ற ஒன்று இருந்துள்ளது. தலைவன் தலைவியை விட்டுப் பரத்தையிடம் தங்கி விட்டுத் திரும்புகின்றான். அவனிடம் தலைவி ஊடல் கொள்வாள். அவ்வூடலை சரிசெய்பவளாகத் தோழி செயல் படுவாள். அதனை நேரடியாகக் கூறாமல் மறைமுகமாகவும் சில பொழுது நேரடியாகவும் எடுத்துக் கூறுபவளாகத் தோழி இருந்துள்ளாள்.

## அழகியல்

அழகியல் என்ற சொல்லுக்கு முருகியல், அழகைப் பற்றிய கொள்கை என்று பொருள் தருகிறது மெய்யப்பன் தமிழ் அகராதி.

“படைப்பிலக்கியத்தின் சிறப்பியல்புகள் பல. அவற்றுள் இரண்டினை, “முருகியல் விளக்கம்” முதன்மையாகக் கொண்டு அமைகிறது. கற்பனை நயமும் எடுத்துரைக்கும் முறையில் கலையழகும் இணைந்து இயங்குகின்ற பொழுது படைப்பிலக்கியம் கவர்ச்சி மிகக் கலையழகைப் பெறுகிறது. இதனோடு அழகான பொருள் வற்றாத “இன்பவூற்று” எனும் கருத்திற்கேற்ப படிப்பவரை மகிழ்விப்பதாகவும் செய்கிறது. இந்த இருவகை இயல்புகள்

*படைப்பு இலக்கியத்தில் முதன்மை இடம் பெற்று இருப்பதைச் சுட்டிக் காட்டுவதே முருகியல் நோக்கமாகும்'' என்று அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் கூறியுள்ளார்.*

*அழகியல் திறனாய்வு (அ) முருகியல் திறனாய்வு*

*"ஆங்கிலத்தில் Theoretical criticism, Aesthetic Criticism என்று இதனை வழங்குவர். இது ரசனை முறைத்திறனாய்வு என்று கூறப்படுகிறது''என்று அரங்க. சுப்பையா கூறியுள்ளார்.*

*"இலக்கியத்திலுள்ள அழகு என்பதையோ, அதனை இரசிப்பது என்பதனை அவ்விலக்கியத்தின் உள்ளடக்கமாகவுள்ள வாழ்க்கை அனுபங்களிலிருந்தும் வாழ்க்கைச் சூழல்களிலிருந்தும் சமூக தளங்களிலிருந்தும் அப்பாற்படுத்திப் பார்க்க முடியாது'' என்று தி.சு.நடராசன் கூறியுள்ளார்.*

*களவு கால உரையாடலின் அழகியல்*

*வேட்கைப்பத்தில் 10 பாடல்கள் அமைந்துள்ளன. இதில் பின் 5 பாடல்கள் களவுக்காலப் பாடல்கள் ஆகும். தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சி மேற்கொண்டு மகிழ்ந்தனர். பின் தொடர் கூட்டம் நடைபெற்றது. பின்னர் கற்புநெறிக்கு மாறி தோழியிடம் எவ்விதம் அக்களவுக் காலத்தினைக் கழித்தீர்கள் என்று வினாவுகின்றார். அதற்குத் தோழி விடைகூறுவதாக 5 பாடல்கள் அமைந்துள்ளன. தோழிக்கும் தலைவனுக்கும் இடையே நடந்த உரையாடல்களை,*

1. *எந்தையும் கொடுக்க*
2. *கொண்டனன் செல்க*
3. *சூள் இவண் வாய்ப்பதாக*
4. *ஆம்பல் ஆகற்க*

*என வகைப்படுத்தலாம்.*

*எந்தையும் கொடுக்க*

*எம் தலைவி உன்னைப் பார்த்த அன்றே அவள் மனத்தில் நீ இருந்து கொண்டாய். அரசன் வாழ்க, அவன் பகைவர் தணிக, மன்னன் வாழ்நாள் நீள்க என்று அறவுணர்ச்சியோடு தலைவி வாழ்த்தினாள். ஆனால் நான், பொய்கையில் அழகிய தாமரைகளை உடைய ஊரினைச் சேர்ந்த தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். தலைவன் - தலைவியை மணம் முடிக்கக் கேட்கும் பொழுது மறுக்காமல் தந்தையும் கொடுக்க வேண்டும் என்று விரும்பினேன் என்று தோழி கூறினாள். இதனை,*

*''மலர்ந்த பொய்கை முகைத்த தாமரைத்*
*தண்துறை ஊரன் வரைக*
*எந்தையும் கொடுக்க எனவேட் டேமே''* *(ஐங்.பா.6)*

*என்பதால் அறியலாம்.*

*கொண்டனன் செல்க*

*தலைவி மன்னன் வாழ்க. அறச் செயல்கள் மிகுந்து வளர வேண்டும். பாவம் அடியோடு கெட வேண்டும் என்று விரும்பினாள். ஆனால் நான், தலைவி உன்னைப் பார்த்த பொழுதே மணந்து விட்டாள். தலைவனுடைய ஊர் குளிர்ந்த நீர்த்துறைகளை உடையது. அங்கு பஞ்சு போன்ற தலைப்பகுதிகளை உடைய பூக்களைப் பூக்கும் மருத மரங்கள் இருக்கும். அதன் கிளைகளில் குருகுகள் தம் சுற்றத்தோடு தங்கி இருக்கும். அத்தகைய ஊரனாகிய தலைவன் இவளைத் தன்னுடன் கொண்டு செல்வானாக என விரும்பினேன் என்று தோழி தலைவனிடம் கூறினாள். இதனை,*

*''உளைப்பூ மருதத்துக் கிளைக்குருகு இருக்கும்*
*தண்துறை ஊரன் தன்னூர்க்*
*கொண்டனன் செல்க எனவேட் டேமே''* *(ஐங்.பா.7)*

*என்ற வழி உணரலாம்.*

*மேலும், பூத்துக்குலுங்கும் மாமரமும் புலால் கமழும் சிறுமீனும் அமைந்த துறைய உடைய ஊரன் தலைவன் அவன் இவளைத் தன்னோடு அழைத்துச் செல்ல வேண்டும் என்று நான் விரும்பினேன் என்று தோழி தலைவனுடன் உரையாடல் நிகழ்த்தினாள். இதனை,*

“பூத்த மாஅத்துப் புலால்அம் சிறுமீன்
தண்துறை ஊரன் தன்னொடு
கொண்டனன் செல்க எனவேட் டேமே” (ஐங்.பா.10)

என்ற வழி அறியமுடிகிறது.

சூள் இவண் வாய்ப்பதாக

நல்ல தளிர்களை உடைய மாமரம் அதன் மீது மயில் இருக்கும். அத்தகைய மாபூக்களும் மயில்களும் நிறைந்த ஊரின் தலைவன், முன்பு தெய்வத்தின் முன் நின்று செய்து கொடுத்த உறுதிமொழி மெய்யாக வேண்டும் என்று விரும்பினேன் என்று தலைவனிடம் உரையாடல் நிகழ்த்தினாள். இதனை,

“அலங்குசினை மாஅத்து அணிமயில் இருக்கும்
பூக்கஞல் ஊரன் சூள் இவண்
வாய்ப்பதாக எனவேட் டேமே” (ஐங்.பா.8)

என்பதால் அறியலாம்.

ஆம்பல் ஆகற்க

கயல் மீனைத் தின்ற நாரை வைக்கோல் போரில் தங்கி இருக்கும் குளிர்ந்த நீத்துறையை உடையவன் தலைவன், அவனுடன் கொண்ட காதல் அம்பல் ஆகாமல் இருக்க வேண்டும் எனில் விரைவில் அவன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று விரும்பினேன். இதனை,

“கயல் ஆர் நாரை போர்வில் சேக்கும்
தண்துறை ஊரன் கேண்மை
அம்பல் ஆகற்க எனவேட்டேமே” (ஐங்.பா.9)

என்ற வழி உணரலாம்.

கற்புக்கால உரையாடலின் அழகியல்

கற்புக் காலத்தில் தலைவன் புறத்தொழுக்கம் மேற்கொள்ளுகின்றான். அதாவது பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்டு நெடுநாள் அங்கேயே தங்கி விடுகின்றான். பின் தவறு என்று உணர்ந்து தலைவியிடம் திரும்பி வருகின்றான். அவ்வாறு திரும்பி வந்து தோழியிடம் நான் பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்ட பொழுது நீங்கள் அனைவரும் எவ்வாறு இருந்தீர்கள் என்று வினவினான். அதற்கு விடைகூறுவதாக 5 பாடல்கள் அமைந்துள்ளன. அவ்வாறு நடந்த உரையாடல்களில் அழகியல்,

1. பாணனும் வாழ்க
2. ஊரன் கேண்மை வழிவழி சிறக்க
3. தன் மனைவாழ்க்கைப் பொலிக
4. பழனம் ஆகற்க
5. தேர் எம் முன்கடை நிற்க

என வகைப்படுத்தலாம்.

பாணனும் வாழ்க

தலைவி அரசன் வாழ்க, நெல்பல பொழிக, பொன் மிகச் சிறக்க என்று இல்லற நினைப்புத் தோன்ற வாழ்த்தினாள். ஆனால் நான் அரும்புகள் நிறைய உடைய காஞ்சியும் சினையை உடைய சிறுமீன்களும் நிறைய ஊரன் வாழ்க. அவனுடன் துணையாக இருக்கும் பாணனும வாழ்க என்று விரும்பினேன். தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை வெளிப்படையாகக் கூறாது நண்பனான பாணனை வாழ்ததி தலைவனைச் சாடுகின்றாள். மேலும் காஞ்சிப்பூவும் மீனின் சினையும் ஒருவரே விளையும் ஊரன் என்று கட்டுவதன் மூலம் உயர்ந்த தலைவியையும் தாழ்ந்த பொது மகளையும் தலைவன் நாடுகின்றான் என்ற தலைவனிடம் தோழி உரையாடுகின்றாள். இதனை,

“நனைய காஞ்சி சினைய சிறுமீன்
யாணர் ஊரன் வாழ்க
பாணனும் வாழ்க எனவேட் டேமே” (ஐங்.பா.1)

என்ற வழி உணரலாம்.

*ஊரன் கேண்மை வழிவழி சிறக்க*

*தலைவி வயல்கள் நன்கு விளைக, இரவலர் வருக என்று தன் இல்லறச் சிறப்பினை வெளிப்படுத்தினாள். ஆனால் நான் கருங்குவளை மலரைப் போலவே நெய்தலும் பூக்கும் ஊரின் தலைவன் சிறந்து வளர்க என்ற வாழ்த்தினேன். அதாவது தலைவன், தலைவியையும் பரத்தையையும் ஒன்றாக எண்ணுகின்றான் என்று தோழி எடுத்துக் கூறினாள். தலைவியும் பரத்தையும் முரண்பட்டு இருப்பர் என்பது இதன் உட்பொருளாக அமைந்துள்ளது. இதனை,*

*“பல்இதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்*
*தண்துறை ஊரன் கேண்மை*
*வழிவழிச் சிறக்க எனவேட் டேமே” (ஐங்.பா.1)*

*என்பதால் அறியலாம்.*

*தன் மனைவாழ்க்கைப் பொலிக*

*தலைவி, பால்வளம் பொலிக, எருமைகள் மிகுக என்று இல்லற மாண்புடன் வாழ்த்தினாள். ஆனால் நான், விதைப்பதற்குச் சென்ற உழவர் முன்னே விளைந்த நெல்லோடு திரும்பும் பூக்கள் நிறைந்த ஊரின் தலைவன் பரத்தை ஒழுக்கம் நீங்கித் தலைவியின் மனையில் வாழ்வானாக என்று விரும்பினேன். தலைவி இல்லற மாண்பு கெடாது வாழ்கின்றாள். ஆனால் தலைவன் அவளை விட்டு பரத்தையுடன் வாழ்கின்றான் என்று தலைவனின் செயலைச் சாடி உரையாடல் தோழி நிகழ்த்துகின்றாள். இதனை,*

*“வித்திய உழவர் நெல்லொடு பெயரும்*
*பூக்கஞ்சல் ஊரன் தன்மனை*
*வாழ்க்கை பொழிக எனவேட் டேமே” (ஐங்.பா.3)*

*என்பதால் உணரலாம்.*

*பழனம் ஆகற்க*

*பகைவர் பெருமை இழந்து புல்லரிச்சோறு உண்க. பார்ப்பான் வேதம் ஓதுக என விரும்பி தலைவி வாழ்த்தினாள். ஆனால் நான், பூத்தும் பயன்படாக் கரும்பும் காய்த்துப் பயன்படும் நெல்லும் ஒரு சேர விளையும் வயல்களை உடைய ஊரனுடைய மார்பு பொதுநிலம் ஆகாது ஒழிக என்று விரும்பினேன். தலைவி நன்மக்கட்பேறு கொடுத்து குலத்தை தழைக்கச் செய்வாள். ஆனால் பரத்தை அவ்வாறு செய்யமாட்டாள். இதனைக் குறிப்பால் எடுத்துக்கூறி தலைவனிடம் உரை நிகழ்த்தினாள் தோழி. இதனை,*

*“பூத்த கரும்பில் காய்த்த நெல்லில்*
*கழனி ஊரன் மார்பு*
*பழனம் ஆகற்க எனவேட் டேமே” (ஐங்.பா.4)*

*என்பதால் உணரலாம்.*

*தேர்எம் முன்கடைநிற்க*

*பசி நிலை இல்லாமல், உடலை வருத்தும் பிணி இல்லாமல் ஆகுக என்று தலைவி விரும்புவாள். ஆனால் நான், தன்னுடன் வாழும் பெரிய மீனை உண்ணும் முதலை உள்ள நீர்த்துறையை உடையை தலைவனது தேர் எங்கள் இல்லத்தின் முன் நிற்க வேண்டும் என்று விரும்புவேன். தலைவன் தலைவியைப் பிரித்து பரத்தையிடம் தங்கிவிட்டான். அவன் மனம் திருந்தி இங்கு வரவேண்டும் என்று நினைத்தேன் என்று தலைவனிடம் உரையாடல் நிகழ்த்துகின்றாள் தோழி. இதனை,*

*“முதலைப் போத்து முழுமீன் ஆரும்*
*தண்துறை ஊரன் தேர்எம்*
*முன்கடை நிற்க எனவேட் டேமே” (ஐங்.பா.5)*

*என்பதால் அறியலாம்.*

*முடிவுரை*

*தலைவியின் மனவுணர்வுகளைப் பிரதிபலிப்பவளாக இருப்பவள் தோழி. அவள், தலைவி, தலைவன் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதில் தவறுவதில்லை. தலைவியின்*

*களவு மற்றும் கற்புக் காலத்தில் மிக முக்கியப்பங்கு வகிக்கின்றாள். களவுக்காலத்தில் தலைவனிடம் பேசி வரைவைத் துரிதப்படுத்துகின்றாள். கற்புக்காலத்தில் தலைவன் பரத்தமை ஒழுக்கம் மேற்கொள்ளும் பொழுது அதனை குறிப்பினால் தவறு என்று சுட்டிக்காட்ட தவறாதவளாகத் தோழி இருக்கின்றாள்.*

*தலைவன் தோழியிடம் களவு மற்றும் கற்புக் காலத்தால் நான் பிரிந்து இருந்த பொழுது எவ்விதம் இருந்தீர்கள் என்று வினவிய உடன் தோழி உரையாடுவதாக இவ்வேட்கைப் பத்து அமைந்துள்ளது. களவுக்காலத்தில் தலைவியும் தலைவனும் இயற்கைப் புணர்ச்சி மேற்கொண்டனர். அதன் பின் தலைவன் மகள் கேட்க தலைவியின் தந்தை கொடுக்க வேண்டும் என்று நினைத்தோம் என்றும் மேலும் தலைவன், தலைவியை அவனுடைய ஊர்க்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்றும் நினைத்தோம். தலைவன் தெய்வத்தின் முன் செய்துகொடுத்த சூள் நிறைபெற வேண்டும் என்று நினைத்தோம். களவினை அறிந்தவர்கள் அம்பல் பேசும் முன் திருமணம் நடைபெறவேண்டும் என்று விரும்பினோம் என்று தலைவனிடம் உரையாடல் நிகழ்தினாள் தோழி. அதனின் அழகியல் பாடல்களின் வழி வெளிப்படுகிறது.*

*கற்புக்காலத்தில் தலைவன் பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்டு திரும்புகின்றான். அப்பொழுது அவன் தோழியிடம் பரத்தையர் பிரிவில் இருந்த பொழுது என்ன நினைத்தீர்கள் என்று வினவிய உடன் தோழி உரையாடல் நிகழ்த்துகின்றாள். அவற்றில் அழகியல் தன்மை வருணை வடிவில் மேலோங்கி நிற்கிறது.*

*தலைவனுடன் எப்பொழுதும் இருக்கின்ற பாணனும் வாழ்க, தலைவனின் கேண்மை வழி வழி சிறக்க வேண்டும் என்றும், எங்களுடைய வாழ்க்கை சிறக்க வேண்டும் என்றும் தலைவனது தேர் எங்கள் வீட்டின் முன் நிற்க வேண்டும் என்றும் தலைவன் பொது நிலம் ஆகாமல் இருக்க வேண்டும் என்றும் உரையாடல் நிகழ்த்தினோம் என்ற தோழி தலைவனிடம் கூறினாள்.*

*துணைநூற்பட்டியல்*


1. *அ.ச.ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, பாவை, பப்ளிக்கேஷன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை, ஜனவரி 2021.*
2. *அரங்க சுப்பையா, இலக்கியத்திறனாய்வு, இசங்கள், கொள்கைகள், பாவை, பப்ளிக்கேஷன்ஸ், 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை, ஜுன் 2022.*
3. *தி.சு.நடராசன், திறனாய்வுக்கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ்(பி) லிட், 41 பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேம், அம்பத்தூர், சென்னை, மார்ச் 2022.*
4. *சி.சேதுராமன், தமிழ் இலக்கிய வரலாறு, பாவை பப்ளிகேஷன்ஸ், ஜானி, ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை, 2015.*
5. *சங்க இலக்கியம், எட்டுத்தொகை, தொகுதி -1, மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர், சென்னை, செப்டம்பர், 2015.*
6. *அர.சிங்காரவடிவேலன், சங்க இலக்கியம் ஐங்குறுநூறு உரை கோவிலூர், மடம் பதிப்பு வெளியிடுவோர் வர்த்தமானன் பதிப்பகம், 21, இராதாகிருஷ்ணன் தெரு, தியாகராய நகர், சென்னை, ஜனவரி.2023.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********